**ஜூலை – 30**

# TNPSC துளிகள்

- அமலாக்கத் துறை இயக்குனரகத்தின் (ED) இயக்குநர் சஞ்சய் குமார் மிஸ்ராவின் பதவிக் காலத்தை செப்டம்பர் 15 ஆம் தேதி வரை நீட்டித்து உச்ச நீதிமன்றம் உத்தரவு இட்டுள்ளது.
- தமிழக சட்டமன்ற உறுப்பினர் ஒருவருக்கு வழங்கப்படும் மாதச் சம்பளம், சட்டசபை கூட்டத் தொடரின் போது ஒவ்வொரு நாளும் செலுத்தப்படும் அமர்வுக் கட்டணம் தவிர்த்து, 1.05 லட்சம் ரூபாய் ஆகும்.
  - ஆனால், அமைச்சர் பதவிக்கு உயர்த்தப்பட்ட ஒரு சட்டமன்ற உறுப்பினரின் மாதச் சம்பளம் 76,800 ரூபாய் மட்டுமே ஆகும்.
- மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களின் பெருநிறுவனங்கள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களுக்கு அதிக அளவு கடன் வழங்கிய பொதுத்துறை வங்கிகளின் பட்டியலில் கனரா வங்கி தொடர்ச்சியாக ஐந்தாவது ஆண்டாக முதலிடத்தில் உள்ளது.
- இந்தியாவின் பட்டியலிடப்பட்ட வணிக வங்கிகள் கடந்த ஒன்பது நிதியாண்டுகளில் மொத்தமாக 10,16,617 கோடி ரூபாய் கடன் தொகைகளை மீட்டெடுத்துள்ளன.
- அடுத்த ஆண்டில் அமெரிக்கா மற்றும் மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெறவுள்ள ஐசிசி ஆடவர் டி20 உலகக் கோப்பைப் போட்டிக்கு அயர்லாந்து மற்றும் ஸ்காட்லாந்து நாட்டு அணிகள் தகுதி பெற்றுள்ளன.
- 8வது இந்திய-ஆஸ்திரேலியப் பாதுகாப்புக் கொள்கைப் பேச்சு வார்த்தை (DPT) ஆனது ஆஸ்திரேலியாவின் கான்பெரா நகரில் நடைபெற்றது.
- 2011 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் ஜூலை 30 ஆம் தேதியன்று சர்வதேச நண்பர்கள் தினம் கொண்டாடப்படுகிறது.

# தமிழ்நாடு செய்திகள்

## கோவில் அர்ச்சகர்களின் நியமனம்





- தனி நீதிபதி தலைமையில் ஜூன் 26 ஆம் தேதியன்று வழங்கப்பட்ட தீர்ப்புக்குத் தடை விதிக்க சென்னை உயர்நீதிமன்றம் மறுத்துள்ளது.

- அர்ச்சகர்கள் (கோயில் அர்ச்சகர்கள்) நியமனத்தில் சாதிக்கு எந்தப் பங்கும் இல்லை என்று ஜூன் 26 ஆம் தேதியன்று வழங்கப் பட்ட தீர்ப்பில் கூறப்பட்டது.
- மேலும், ஆகம சாஸ்திரத்தின் படி பூஜைகள் மற்றும் பிற சடங்குகளைச் செய்ய முறையாகப் பயிற்சிப் பெற்ற எவரும் அந்தப் பதவிக்கு நியமிக்கப்படலாம் என்றும் அந்தத் தீர்ப்பில் கூறப்பட்டது.
- இந்த வழிகாட்டுதல்கள் ஆனது, சேஷம்மாள் வழக்கில் (1972) உச்சநீதிமன்றம் வகுத்த சட்டத்திற்கு முரணானது.
- 28 சைவ ஆகமங்கள் மூலம் நிர்வகிக்கப்படும் கோவில்களில், ஆதி சைவர்கள் / சிவாச்சாரியர்கள் /குருக்கள் ஆகிய சமூக பிரிவைச் சேர்ந்தவர்கள் மட்டுமே அர்ச்சகர் ஆவதற்கு மிகவும் தகுதியுடையவர்கள் என்று காரண ஆகமமும், இதர மற்ற 27 சைவ ஆகமங்களும் தெளிவாகக் கூறுகின்றன.
- இந்த வழக்கத்தினை சேஷம்மாள் வழக்கில் உச்சநீதிமன்றம் உறுதி செய்தது.
- இந்த விவகாரம் தொடர்பான பிற வழக்குகள்
    - ஸ்ரீமத் பேரருளலா எத்திராஜ ராமானுஜ ஜீயர் சுவாமி மற்றும் தமிழ்நாடு மாநில அரசு இடையிலான வழக்கு (1972).
    - ஆதி சைவச் சிவாச்சாரியார்கள் நலச் சங்கம் மற்றும் தமிழ்நாடு மாநில அரசு இடையிலான வழக்கு (2016).

# தேசியச் செய்திகள்

## பிறப்பு மற்றும் இறப்புப் பதிவு (திருத்தம்) மசோதா, 2023





- இந்திய அரசாங்கமானது, 2023 ஆம் ஆண்டு பிறப்பு மற்றும் இறப்புப் பதிவு (திருத்தம்) மசோதாவினை மக்களவையில் தாக்கல் செய்துள்ளது.
- புதிய மசோதாவானது, பிறப்புச் சான்றிதழுக்கு ஆதார் எண்ணைப் பயன்படுத்துவதை கட்டாயமாக்குகிறது.
- இந்த நடவடிக்கையானது 1969 ஆம் ஆண்டு அசல் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒரு திருத்தத்தின் ஒரு பகுதியாகும்.
- இந்த முன்மொழியப்பட்டத் திருத்தமானது, குழந்தைப் பிறப்பிற்கானப் பதிவின் போது பெற்றோர்கள் மற்றும் தகவல் அளிப்பவர்களின் ஆதார் எண்கள் தேவை என்று

கூறுகிறது.

- இறப்புப் பதிவு மற்றும் சான்றிதழ் வழங்கலை விரைவுபடுத்துவதற்குச் சிறப்பு "சார் பதிவாளர்கள்" நியமனத்தையும் இம்மசோதா முன்மொழிகிறது.
- ஒரு பதிவாளரை அந்த நபருக்கு ஏழு நாட்களில் இம்மாதிரியான சான்றிதழை வழங்க செய்யுமாறு இது எண்ணுகிறது.
- இது பிரதி எடுக்கும் வகையிலானச் சான்றிதழ்களுக்குப் பதிலாக எண்ம ரீதியிலான பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழை வழங்கிட எண்ணுகிறது.

## ஒளிப்பதிவு (திருத்தம்) மசோதா, 2023




- மாநிலங்களவையானது, 2023 ஆம் ஆண்டு ஒளிப்பதிவு (திருத்தம்) மசோதாவினை நிறைவேற்றியுள்ளது.
- இது கடுமையான திரைப்படக் களவு எதிர்ப்பு விதிகளை அறிமுகப்படுத்தி திரைப்பட தணிக்கை முதல் பதிப்புரிமை வரையிலான பல செயல்முறைகளை உள்ளடக்கும் வகையில் சட்டத்தின் வரம்பினை விரிவுபடுத்துகிறது.
- ஒரு திரைப்படத்தினை அனுமதியின்றித் திருடுவதற்கு எந்தவொரு ஒலி-ஒளிப்பதிவு சாதனத்தைப் பயன்படுத்துபவர்களுக்கும் மூன்று ஆண்டுகள் காலம் என்ற வரையில் சிறைத் தண்டனையும், படத்தின் தயாரிப்புச் செலவில் 5% வரை அபராதமும் விதிக்க இந்த மசோதா முன்மொழிகிறது.
- இந்த மசோதாவானது, 1952 ஆம் ஆண்டு ஒளிப்பதிவுச் சட்டத்தைத் திருத்தியமைக்க முயல்கிறது.
- இளம் பருவத்தினருக்கு மேற்பார்வை தேவைப்படும் படங்களுக்கு மூன்று வயதுசார் மதிப்பீடுகளையும் வழங்கும் முறையை இந்த மசோதா அறிமுகப் படுத்துகிறது.
- திரைப்படங்கள் தற்போது U/A மதிப்பீட்டைப் பெறுகின்றன.
- இது தற்போது U/A 7+, U/A 13+ மற்றும் U/A 16+ எனப் பிரிக்கப்பட்டுள்ளன.


# சர்வதேசச் செய்திகள்

## ஜப்பானின் மக்கள் தொகை சரிவு


- ஜப்பானியர்களின் மக்கள்தொகை முந்தைய ஆண்டில் இருந்த எண்ணிக்கையை விட

சுமார் 800,000 குறைந்து, 2022 ஆம் ஆண்டில் 122.4 மில்லியனாகக் குறைந்துள்ளது.

- இது மொத்த மக்கள் தொகையில் 0.65% சரிவாகும் என்பதோடு, அந்நாட்டின் மக்கள் தொகை தொடர்ந்து 14 வது ஆண்டாக வீழ்ச்சியினைக் கண்டு வருகிறது.
- ஜப்பானின் மொத்த மக்கள் தொகையானது 125.41 மில்லியனாக இருந்த நிலையில், இது முந்தைய ஆண்டில் இருந்த எண்ணிக்கையை விட அரை மில்லியனுக்கும் மேலாக குறைந்துள்ளது.
- ஜப்பானில் பதிவு செய்யப்பட்ட முகவரிகளைக் கொண்டுள்ள வெளிநாட்டவரின் எண்ணிக்கை 10.7% அதிகரித்துள்ளது.
- தற்போது ஜப்பானின் மக்கள் தொகையில் சுமார் 2.4% வெளிநாட்டவர் ஆவர்.
- ஜப்பானில் கடந்த ஆண்டில் 771,801 என்ற மிகக் குறைவானப் பிறப்புகள் மட்டுமே பதிவாகியுள்ளன.




## வளங்களின் திறன் மற்றும் சுழற்சி முறைப் பொருளாதாரத் தொழில்துறை கூட்டணி




- G20 அமைப்பின் நாடுகள் வளங்களின் திறன் மற்றும் சுழற்சி முறை பொருளாதாரத்

தொழில்துறைக் கூட்டணியை (RECEIC) தொடங்க உள்ளன.

- இது வளங்களின் திறன் மற்றும் சுழற்சி முறைப் பொருளாதார நடைமுறைகளை நன்கு மேம்படுத்துவதில் உலக நாடுகளின் கவனத்தினை ஈர்க்கும் வகையில் தொழில் துறையினால் மேற்கொள்ளப்படும் ஒரு முன்னெடுப்பாகும்.
- இந்தக் கூட்டணியில் "11 வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த 39 ஸ்தாபன உறுப்பினர்கள் இடம் பெற்றுள்ளனர்.
- RECEIC ஆனது தகவல் மற்றும் சிறந்த நடைமுறைப் பரிமாற்றம், அதன் பங்குதார நாடுகளின் தொழில்துறைகள் மத்தியில் நிலையான நடைமுறைகளை மேம்படுத்தும் வகையிலான ஒரு தளமாகச் செயல்படும் வகையிலான தளமாக இது வடிவமைக்கப் பட்டுள்ளது.

# பொருளாதாரச் செய்திகள்


## பாரத் ஸ்டேட் வங்கியின் ஈகோராப் அறிக்கை




- SBI ஈகோராப் எனப்படும் பாரத ஸ்டேட் வங்கியின் பொருளாதார ஆராய்ச்சித் துறையின் அறிக்கையானது, 2028 ஆம் நிதியாண்டிற்குள் உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரம் என்ற ஒரு அடையாளத்தை இந்தியா பெற வாய்ப்புள்ளது என்று கூறி உள்ளது.
- தற்போதைய வளர்ச்சி விகிதத்தின் படி, 2027 ஆம் ஆண்டில் ஜப்பான் மற்றும் ஜெர்மனி ஆகிய இரு நாடுகளையும் இந்தியா விஞ்ச வேண்டும்.
- 2022-2027 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் இந்தியாவில் பதிவாகி வரும் பொருளாதார வளர்ச்சி ஆனது, ஆஸ்திரேலியாவின் பொருளாதாரத்தின் தற்போதைய அளவை விட 1.8 டிரில்லியன் டாலர் அதிகமாகும்.
- ஒவ்வொரு 2 வருடங்களுக்கும், இந்தியாவானது தனது பொருளாதார மதிப்பீட்டில் 0.75 டிரில்லியன் டாலர் வளர்ச்சியினை சேர்க்கும் வாய்ப்பு உள்ளது.
- 2047 ஆம் ஆண்டிற்குள் இந்தியா 20 டிரில்லியன் டாலர் மதிப்பினை எட்டும் என்பதை இது குறிக்கிறது.
- மகாராஷ்டிரா மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் 2027 ஆம் ஆண்டில்

(அல்லது 2028 ஆம் நிதியாண்டில்) 500 பில்லியன் டாலர் மதிப்பினை எட்டும்.

## வெண்ணிறக் குறியீடு கொண்ட தானியங்குப் பண வழங்கீட்டு இயந்திரங்கள்




- இந்திய ரிசர்வ் வங்கியானது, வங்கி அல்லாத நிறுவனங்களுக்கு நாடு முழுவதும் வெண்ணிறக் குறியீடு கொண்ட தானியங்குப் பண வழங்கிட்டு இயந்திரங்களை (WLAs) நிறுவவும், சொந்தமாக்கவும் மற்றும் இயக்கவும் அனுமதி அளித்துள்ளது.
- இந்த நடவடிக்கையானது, குறிப்பாக சிறிய நகரங்கள் மற்றும் கிராமப்புறங்களில் வங்கிச் சேவைகளின் பரவலை விரிவுபடுத்துவதையும், நிதி உள்ளடக்கத்தை நன்கு மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- வெண்ணிறக் குறியீடு கொண்ட தானியங்குப் பண வழங்கிட்டு இயந்திரங்கள் ஆனது, வங்கிகள் சாராத நிறுவனங்களால் அமைக்கப்பட்டு, சொந்தமாக மற்றும் இயக்கப் படும் ஏடிஎம்கள் ஆகும்.
- வங்கி சாராத ATM இயக்க நிறுவனங்கள் 2007 ஆம் ஆண்டு பண வழங்கீட்டு மற்றும் தீர்வு முறைகள் சட்டத்தின் கீழ் இந்திய ரிசர்வ் வங்கியினால் அங்கீகரிக்கப் பட்டவை ஆகும்.
- வங்கிகள் வழங்கும் பற்று /கடன் / முன்னதாக பணம் செலுத்தப்பட்ட அட்டைகளைப் பயன்படுத்தி வாடிக்கையாளர்களுக்கு வங்கிச் சேவைகளை வழங்குகின்றன.
- கணக்கு குறித்தத் தகவல், பண வைப்பு, கட்டணம் செலுத்துதல், சிறு கணக்கு அறிக்கைகள், PIN மாற்றம் மற்றும் காசோலைப் புத்தக கோரிக்கைகள் போன்ற சேவைகளையும் இவை வழங்குகின்றன.

# மாநிலச் செய்திகள்

## வெறிநாய்க்கடி நோயினால் ஏற்படும் அதிக உயிரிழப்புகள்

- 2022 ஆம் ஆண்டில் வெறிநாய்க்கடி நோயினால் ஏற்படும் உயிரிழப்புகள் ஆனது இந்தியாவிலேயே டெல்லியில் தான் அதிக எண்ணிக்கையில் (48) பதிவாகியுள்ளது.
- மேற்கு வங்காளத்தில் 38 உயிரிழப்புகளும், அதைத் தொடர்ந்து ஆந்திரப் பிரதேசம்,

கர்நாடகா, மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் தலா 29 உயிரிழப்புகள் பதிவாகி உள்ளன.

- மத்திய சுகாதாரத் துறை அமைச்சகம் ஆனது, வெறிநாய்க்கடி நோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டிற்காக தேசிய வெறிநாய்க்கடி நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டத்தை (NRCP) தொடங்கியுள்ளது.

**HEALTH MINISTRY'S DATA**

| STATE/UT | DEATHS |
|---|---|
| Delhi | 48 |
| West Bengal | 38 |
| Maharashtra | 29 |
| Karnataka | 29 |

# முக்கிய தினங்கள்

## சர்வதேசப் புலிகள் தினம் – ஜூலை 29




- இது அருகி வரும் புலி இனங்கள் பற்றி ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த நாள் முதன்முதலில் 2010 ஆம் ஆண்டில் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் புலிகள் உச்சி

மாநாட்டின் போது புலிகளை அதிக எண்ணிக்கையில் கொண்ட நாடுகளால் நிறுவப் பட்டது.

❖ 2022 ஆம் ஆண்டிற்குள் புலிகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்குவதற்கு உறுதி பூண்டுள்ள Tx2 கூட்டணியினை உருவாக்குவதற்கு புலிகளை அதிக எண்ணிக்கையில் கொண்ட 13 நாடுகள் கை கோர்த்தன.

# இதரச் செய்திகள்

## உலக நகரங்கள் கலாச்சார மன்றம் – பெங்களூரு

❖ உலக நகரங்கள் கலாச்சார மன்றத்தில் (WCCF) அங்கம் வகிக்கும் முதல் இந்திய நகரமாக பெங்களூரு மாறியுள்ளது.

❖ உலக நகரங்கள் கலாச்சார மன்றமானது 2012 ஆம் ஆண்டில் லண்டனின் கலாச்சாரம் மற்றும் படைப்பாக்கம் மிக்க தொழில்துறைகளுக்கான துணை மேயரான ஜஸ்டின் சைமன்ஸ் OBE என்பவரால் நிறுவப்பட்டது.

❖ இந்த நகரங்களில் உள்ள கொள்கை வகுப்பாளர்கள் ஆராய்ச்சி மற்றும் தகவல்களைப் பகிர்ந்து கொள்ளவும், நகரங்களின் எதிர்காலச் செழுமையில் கலாச்சாரத்தின் முக்கியப் பங்கு குறித்து ஆராயவும் இது வழிவகை செய்கிறது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★